www.padippakam.com

Thamilar Nallanpuri Man...

தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

### பத்திரிகை அறிக்கை.

யாழ்நகரில் புலி வீரர்களின் போராட்ட சாதனை.
******** ** ****** ******* ******

பொலிஸ் நிலையமும் D.I.G தலைமையகமும் தரைமட்டம்.
******** ***** ********** *******

சிங்களப் பொலிசார் பலி. பெருமளவு ஆயுதங்கள் அபகரிப்பு.
****** ******* *** ************* ******

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொரில்லா அதிரடிப்படை வீரர்கள் கடந்தஇரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் மீதும் DIG தலைமைக்காரியாலயத்தின் மீதும் பெரும் தாக்குதலை நடாத்தி இரு கட்டடங்களையும் தரைமட்டமாக்கினர். யாழ் பொலிஸ் நிலையமானது தமிழீழத்தில் மிகவும் பெரியதும்,பாதுகாப்பு நிறைந்ததும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலில் பல சிங்கள கொமாண்டோ பொலிஸார் கொல்லப்பட்டனர்.ஏனையோர் சிதறி ஓடினர். பொலிஸ் நிலையத்திலிருந்து எமது வீரர்கள் ஏராளமான ஆயுதங்களைக்கைப்பற்றினர்.

ஏப்ரல் மாதம் 10 ம் திகதி இரவு 9.30 மணியளவில் வே.பிரபாகரன் தலைமையில் அமைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பல அதிரடிப்படை அணிகளைக் கொண்ட கொரில்லாப்படைப்பிரிவொன்று நவீன ரக ஆயுதங்களுடன் யாழ் பொலிஸ் நிலையத்தை சூழ்ந்துகொண்டு இத்தாக்குதலை ஆரம்பித்தனர். ராக்கட்டுக்கள் பாரிய இயந்திரத்துப்பாக்கிகள் போன்ற கனரக ஆயுதங்கள் மூலம் நடாத்தப்பட்ட இத்தாக்குதல் பல மணிநேரம் வரை நடைபெற்றது: இத்தாக்குதலில் தாக்குப்பிடிக்க முடியாத பொலிசார் சிதறுண்டு ஓடினர். ஊக்கமுனைப்போடு தாக்குதலை நடாத்திக்கொண்டு பொலிஸ் நிலையத்துள் புகுந்த எமது வீரர்கள் ஆயுதக்களஞ்சியத்தை சூறையாடி பெருந்தொகையான ஆயுதங்களையும் துப்பாக்கி ரவைகளையும்கைக்குண்டுகளையும் கைப்பற்றினர் பின் அதிசக்திவாய்ந்த வெடிகுண்டுகள் வைத்து பொலிஸ்நிலையத்தையும் D.I.G தலைமைக்காரியாலயத்தையும் தகர்த்தெறிந்தனர். இது இவ்வாறிருக்க குருநகர் இராணுவமுகாமிலிருந்து ஆயுதப்படைகள் வந்துசேர்வதை தடுக்குமுகமாக இராணுவப்பாதையில் இருந்த பல மதகுகளையும் தகர்த்ததுடன் வீதியின் பல இடங்களையும் நிலக்கண்ணி வெடிகளை வைத்து எமது வீரர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் இராணுவத்தினர் பொலிஸ் நிலையத்திற்கு வராதபடி தடுக்கப்பட்டனர். இறுதியில் எமது போராளிகள் நான்கு வாகனங்கள் நிறைந்த பெருந்தொகையான ஆயுதங்களுடன் தளத்திற்கு மீண்டனர். பொலிஸ்நிலைய ஆயுதக்கிடங்கிலிருந்து 35 - 303றைபிள்கள், 54புத்தம் புதிய ரிப்பீற்றர் துப்பாக்கிகள், 2உப இயந்திரத்துப்பாக்கிகள்,(S.M.G), 2 SAR80தானியங்கித்துப்பாக்கிகள் (சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டவை), 1 SLR துப்பாக்கி, 45 வேட்டைசாதாரண துப்பாக்கிகள்,

படிப்பகம்

www.padippakam.com

50 க்கும் அதிகமான சுழல் துப்பாக்கிள், 175 அதிசக்திவாய்ந்த கைக்குண்டுகள், 3கண்ணீர்ப்-புகைத்துப்பாக்கிகள், 100 கண்ணீர்ப்புகைக்குண்டுகள், பல்லாயிரக்கணக்கான துப்பாக்கிரவைகள் அடங்கிய ரவைப்பெட்டிகள், ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் பிரித்தானிய SAS, இஸ்ரேலிய மொசாட், போன்ற சர்வதேச நாசகார கும்பல்களினால் பயிற்றப்பட்ட பல கொமாண்டோப் பொலிசார் கொல்லப்பட்டனர். எனினும் கொல்லப்பட்டோர் பற்றிய எண்ணிக்கை விபரம் இன்னும் கிடைக்கவில்லை: இந்த நேரடித்தாக்குதலின் போது எமது வீரர்களுக்கு எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை:என்பது குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா அரசின் பாதுகாப்பு அரண் எனக்கருதப்பட்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை எமது வீரர்கள் நிர்மூல்மாக்கியமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் குதூகலத்தை ஏற்படுத்தியுள்ளது. வீதிகளுக்கு வந்தபொதுமக்கள் எமது வீரர்களை பாராட்டி மகிள்ச்சி கர ஆரவாரம் தெரிவித்தனர்.

இந்த அறிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரும் இராணுவத்தளபதியுமாகிய வே.பிரபாகரன் அவர்களின் சார்பில் வெளியிடப்படுகிறது:

----புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.-----

11.04.1985.

எஸ்.சுப்பிரமணியம்.
அரசியற்பிரிவு.
தமிழீழ விடுதலைப்புலிகள்.
....................

Thamilar Nallanpuri Mantram

படிப்பகம்